# சமூக அறிவியல் பல்கலைக்கழகப் பள்ளிக்கு எஸ்ஆர் நாதனின் பெயர்

சிங்கப்பூரின் ஆறாவது அதிபர் அமரர் எஸ்ஆர் நாதனை கௌ ரவிக்கும் விதமாக சிங்கப்பூர் சமூக அறிவியல் பல்கலைக் கழகத்தின் மனித மேம்பாடு, சமூக சேவைகள் பள்ளிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது.

அந்தப் பள்ளி இனி 'எஸ்ஆர் நாதன் மனித மேம்பாட்டுப் பள்ளி' என்று அழைக்கப்படும்.

பாலர் பருவ கல்வி, பெரி யோரின் கற்றல், மூப்பியல், ஆலோசனை போன்றவற்றில் இந்தப் பள்ளி கவனம் செலுத் தும்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந் தினராகக் கலந்துகொண்ட அதிபர் ஹலிமா யாக்கோப், சக சிங்கப்பூரர்களைக் கைதூக்கி விடுவதிலும் சமூக ஒருங் கிணைப்பை வளர்ப்பதிலும் திரு நாதன் கொண்டிருந்த வாழ்நாள் கடப்பாட்டுக்கு அங்கீகாரமாக அவரது பெயர் சூட்டப்பட்டிருப் பதாகச் சொன்னார்.

பெயர் சூட்டலுக்குப் பின்னர் பேசிய பல்கலைக்கழகத் தலை வர் பேராசிரியர் சியோங் ஹீ கியட், "எங்களது பல்கலைக் கழகப் பணிகளில் திரு நாதன் உண்மையிலேயே பேரார்வம் கொண்டிருந்தார்.

"சமூகத்துக்குச் சேவையாற் றும் நமது மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக வாழ் நாள் கல்வி அளிக்கும் எங்களது நோக்கத்துக்கு அவர் பேராதரவு வழங்கியதோடு தகுந்த ஆலோ சனைகளையும் வழங்கிவந்தார்," என்றார்.

கடந்த 2016ஆம் ஆண்டில் மறைந்த திரு எஸ்ஆர் நாதன் இந்தப் பல்கலைக்கழகத்தின் புரவலராக இருந்தார்.

நேற்றைய நிகழ்ச்சியில் திரு எஸ்ஆர் நாதனின் துணைவியார் ஊர்மிளா நாதன், "மறைந்த எனது கணவரின் பெயரை பல் கலைக்கழகத்தின் பள்ளிக்குச் சூட்டப்பட்டதில் எங்களது குடும் பம் மகிழ்ச்சி கொள்கிறது," என் றார். அந்தப் பள்ளியின் தொலை நோக்கு மற்றும் நற்பண்புகளோடு இணைப்பு கொண்டிருப்பதில் தமது குடும்பம் பெருமை கொள் வதாகவும் அவர் சொன்னார்.

கல்வி அமைச்சர் (உயர் கல்வி, திறன்கள்) ஓங் யி காங் கும் நிகழ்ச்சியில் பங்கு கொண் டோரில் ஒருவர்.




அமரர் எஸ்ஆர் நாதனின் துணைவியார் திருமதி ஊர்மிளா நாதனுடன் 'செல்ஃபி' எடுத்துக்கொண்ட நிகழ்வில் அதிபர் ஹலிமா யாக்கோப், கல்வி அமைச்சர் (உயர் கல்வி, திறன்கள்) ஓங் யி காங் மற்றும் பலர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**